மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

முன்னிலை திரு. சி. ராஜேஷ், பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி

2019 ம் ஆண்டு ஜுலை திங்கள் 05 ம் நாள் வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண். 48/2013

1. தங்கமணி
2. ரோகிணி
3. குருமூர்த்தி
4. பிச்சையம்மாள் ................. வாதிகள்

//எதிர்//

1. வன்னிமுத்து
2. சுசீலா
3. பெரியசாமி ................. பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 02.07.2019 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.எஸ்.எம்.சாகுல்உறமீது அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ஆர்.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தால் பிரதிவாதிகள் ஒருதலைநிலையாக்கம் செய்யப்பட்டும் எடுத்துரைத்த வாதிகள் தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

தீர்ப்புரை

தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு உள்ள அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்.

1. தாவா சொத்துக்களை செந்தில்நாதன் செட்டியாரிடமிருந்து காத்தான் என்பவர் குத்தகைக்கு அனுபவம் செய்து வந்தார். காத்தானுக்கு மாரியப்பன், அய்யனார், வன்னிமுத்து ஆகிய 3 மகன்கள். மாரியப்பனுக்கு 1 ம் வாதியின் கணவர் ரவி(எ) ரவிக்குமார் மகனாகும். 2,3 வாதிகள் 1 ம் வாதியின் பிள்ளைகள். 4 ம் வாதி பிச்சையம்மாள் மாரியப்பனின் மனைவி. தாவா

2வது அயிட்ட சொத்து காலி மனையாகும். 10.08.1996ம்தேதி அய்யனார் மற்றும் வன்னிமுத்து ஆகியோர் குத்தகை சொத்துக்களை பாகம் பிரித்து பாக முச்சலிக்கா எழுதிக்கொண்டனர். ரவி (எ) ரவிக்குமார் 28.05.2011ம் தேதி இறந்துவிட்டார். அவருக்கு வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள். தாவா சொத்துக்களை சாகுபடி செய்வதற்காக வாதிகள் உழவு செய்தனர். தாவா முதல் அயிட்ட சொத்தில் நெல் மற்றும் வாழை சாகுபடி செய்வார்கள். 1ம் பிரதிவாதி வன்னிமுத்து இறந்துபோன ரவி (எ) ரவிக்குமாரின் சித்தப்பா ஆகும். தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. 11.09.2011ம் தேதி தாவா சொத்துக்களில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்ய முயற்சி செய்தனர். அதை வாதிகள் சிரமப்பட்டு தடுத்துவிட்டனர். தாவா சொத்துக்களில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகள் மீண்டும் இடையூறு செய்வார்கள் என்பதால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**1**ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு **2, 3,** பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்

2. வாதிகளின் வழக்கு நிலைக்கக்கூடியது அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பே 1ம் வாதியின் கணவர் வாதிகளுடன் குளித்தலையில் குடியேறிவிட்டார். தாவா சொத்து நங்கவரம் வடக்கு கிராமத்தில் உள்ளது. தாவா புல எண்.495/3ல் ஏக்கர் 1.18 சென்ட் நிலம் காத்தானால் அனுபவம் செய்யப்பட்டு வந்து அவருக்கு பிறகு அய்யனார் மற்றும் 1ம் பிரதிவாதி சேர்ந்து வடபுறம் 59 சென்ட் அய்யனாரும், தென்புறம் 59 சென்ட் 1ம் பிரதிவாதியும் பிரித்துக்கொண்டனர். தென்புறம் உள்ள 59 சென்ட்டில் 1ம் பிரதிவாதி சாகுபடி செய்து அனுபவம் செய்து வருகிறார். புல எண்.529/10ல் 12 சென்ட் நத்தம் நிலத்தை காத்தான் அனுபவம் செய்து வந்து அவருக்கு பிறகு அய்யனார் மற்றும் 1ம் பிரதிவாதி தலா 6 சென்ட் பாகம் பிரித்துக்கொண்டனர். 1ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கிடைத்த சொத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே தென்புறம் பார்த்த ஓட்டு வீடு கட்டியுள்ளார். புல எண்.529/10ல் 6 சென்ட் நிலத்தை குறிப்பிட்ட நான்கெல்லைக்குள் தொடர்ந்து எவ்வித இடையூறும் இல்லாமல் 20 ஆண்டுகளுக்கு மேலாக 1ம் பிரதிவாதி அனுபவம் செய்துவருவதால் அதில் எதிரிடை அனுபவ பாத்தியம் சித்தித்துள்ளது. 1ம் பிரதிவாதியின் மற்றொரு மகனான ஜெகநாதனை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. தாவா சொத்துக்களை வாதிகள் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை. எனவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கு விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

எழுவினாக்கள்

1. தாவா சொத்துக்கள் வாதிகளின் தனிப்பட்ட அனுபவத்தில் உள்ளதா?
2. வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
3 வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

4. வாதிகள் தரப்பில் 4ம் வாதி பிச்சையம்மாள் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை. வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் பிரதிவாதிகள் ஒருதலை நிலையாக்கம் செய்யப்பட்டனர்.

5. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு உள்ள அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதுஎன நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களை 1ம் வாதியின் கணவரான ரவி (எ) ரவிக்குமாரின் தகப்பனார் மாரியப்பன் அனுபவம் செய்து வந்து அதன் பிறகு தற்போது வாதிகள் தொடர்ந்து அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்துக்களில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்வதாகவும் வாதிகள் தரப்பில் கூறப்பட்டது. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருவதாக எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது.

6. 10.08.1996ம் தேதியில் ரவிக்குமார், அய்யனார் மற்றும் 1ம் பிரதிவாதி வன்னிமுத்து ஆகியோர் செய்து கொண்ட பாக முச்சலிக்க வா.சா-ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் நங்கவரம் கிராமம், மேல்நங்கவரம் கிராமத்தில் உள்ள 1 ஏக்கர் 27 சென்ட்டை 3 பேரும் சரிசமமாக தலா 42 சென்ட் பிரித்துக்கொண்டதாக கூறப்பட்டுள்ளது. வா.சா-ஆ.1 முச்சலிக்காவை குறியீடு செய்யும் போது பதிவு செய்யப்படாத முச்சலிக்கா என பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆனால் அதன் பிறகு தாவா சொத்துக்கள் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு ஆவணமோ, சாட்சியமோ முன்னிடப்படவீல்லை. ரவியின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இருப்பதாகவும், தாவா

சொத்துக்களில் வாதிகளின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதை மறுத்துரைப்பதற்கு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை. எனவே, வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக,

தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு உள்ள அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி இவ்வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2019 ம் ஆண்டு ஜுலை திங்கள் 05 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-சி.ராஜேஷ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை

வாதி தரப்பு சாட்சிகள்

வா.சா.1 பிச்சையம்மாள் (4 ம் வாதி)

வாதி தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | வா.சா.ஆ 1 | 10.08.1996 | ரவிக்குமார், அய்யனார், வன்னிமுத்து ஆகியோருக்கிடையே ஏற்பட்ட பாக முச்சலிக்கா. |
| 02. | வா.சா.ஆ 2 | | ரவிக்குமாரின் இறப்பு சான்றிதழ் |

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் - இல்லை.

பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் - இல்லை

ஒம்/-சி.ராஜேஷ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை